1. கேள்வி: தேசிகன் எப்போது அவதரித்தார் ?

   பதில்: 1268 -- 750 ஆண்டுகளுக்கு முன்பாக

2. எங்கு அவதரித்தார்?

   பதில்: காஞ்சியில் தூப்புல் என்னும் தலத்தில் அவதரித்தார்.

3. கேள்வி: எந்த அவதாரமாக கருதப்படுகிறார் ?

   பதில்: திருவேங்கடமுடையான் அவதாரமாக கருதப்படுகிறார் .

4. கேள்வி: யாரிடம் சாஸ்திரங்கள் கற்றார் ?

   பதில்: மாதுலர் கிடாம்பி அப்புளாரிடம் ஸகலசாஸ்த்ரங்களையும் கற்றார்.

5. கேள்வி: அவருக்கு யாருடைய கடாட்சம் கிடைத்தது?

   பதில்: பரிமுகன் - ஸ்ரீ ஹயக்ரீவர் கடாட்சம் கிடைத்தது.

6. கேள்வி: பூவுலகில் எத்தனை ஆண்டு ஜீவித்தார்

   பதில்: 102 ஆண்டுகள்.

7. கேள்வி : அவரது சிறப்பு என்ன?

   பதில்: அவிச்சின்ன இராமனுஜரின் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை வேறூன்ற செய்தார். ஸம்ப்ரதாய பரம்பரையின் திலகமாக திகழ்ந்தார்.

8. கேள்வி: மேலும் அவரது சிறப்பு என்ன?

   பதில்: ஸ்தோத்திரங்கள். ஸித்தாந்த ரக்ஷண க்ரந்தங்கள் காவியங்கள் என நூற்றுக்கும் மேற்ப்பட்ட வடமொழி ப்ராக்ருத க்ரந்தங்களை அருளியது. ஸ்வமத ரக்ஷணத்திற்காக முன்னாள் புணராத பரமதப்போர் புரிந்து அவைகளை ஜயித்தது.

ஆயிரம் பாடல்கள் ஒரே யாமத்தில் இயற்றி பாதுகையின் பெருமையை உலகறிய செய்தது.

9. கேள்வி: அவருக்கு கிடைத்த பிருதங்கள் என்ன?

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர். கவிதார்கிக கேஸரி, வேதாந்தாசார்யர் என்பனவாகும்